மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காவிரியிலிருந்தும், பொன்னியாற்றிலிருந்தும், தேக்குமலையாற்றிலிருந்தும், ஆக இப்படி மூன்று இடங்களிலிருந்து தண்ணீர் கொண்டுவரலாமா என்று பரிசீலிக்கப்படுகிறது. காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டுவர 88 லட்ச ரூபாய் செலவாகும் என்றும், அது அதிகப்படியான செலவு என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. பொன்னியாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவர 78 லட்ச ரூபாய் செலவாகும் என்றும், ஆனால், அப்படிக் கொண்டுவருவதன்மூலம் ஆயக்கட்டுகள் பாதிக்கப்படுமா என்றும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில் மணப்பாறைக்கு 23 மைல் அருகாமையிலுள்ள தேக்குமலை ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதைப்பற்றியும் பரிசீலிக்கப்படுகிறது. இந்தப் பரிசீலனை விரைவில் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அமைச்சகத்தில் இந்தி

* 119 வினா—திரு. துரைமுருகன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அமைச்சர்களை இனிமேல் இந்தியில்தான் அழைக்க வேண்டும் என்று மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது மாநில அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) 1961-ம் ஆண்டு இந்திய அரசு விதிகளின் (அலுவல்களை ஒதுக்கீடு செய்தல்) முதல் விவர அட்டவணையிலுள்ள ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலாக அவற்றிற்கீடான இந்தி சொற்களை அமைத்துக்கொள்ள வகை செய்து அவ்விதிகளைத் திருத்துவதற்காக வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு, காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு இதற்கு முன் அளித்திருந்த உறுதிமொழிகளுக்கு முரணானது என்றும், 1968-ம் ஆண்டு 1-வது மத்திய சட்டத்தால் திருத்தப்பட்ட 1963-ம் ஆண்டு ஆட்சிமொழிகள் சட்டத்தின் விதித்துறைகளை மீறியதாகும் என்றும் முதலமைச்சர், மாண்புமிகு தலைமை அமைச்சருக்கு அனுப்பிய நேர்முகக் கடிதத்தில் அவரது நாட்டத்திற்குக் கொண்டு வந்தார். அரசால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பெரும் மனக்கசப்பு இம்மாநிலத்தில் கிளர்ந்து பரவும் முன்னர், மேற்சொன்ன அறிவிப்பு திரும்பப் பெறப்படவேண்டும் என்றும் தலைமை

1972 ஆகஸ்ட் 17]

யமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது. இங்கு எழும் மனக்குமுறல் களைப் போக்க வேண்டுமென்ருல், இதற்கு விரைவில் பதில் அனுப்பு மாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. தலைமை அமைச்சரிடமிருந்து மேற்சொன்ன நேர்முகக் கடிதத்திற்கு இதுவரையில் எந்தவித பதிலும் வரவில்லை.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இந்தியாவின் தலைமை அமைச்சருக்கு எழுதிய கடிதத்திற்குப் பதில் வராமல் இருக்கிறது. ஆனல், நேற்று முன்தினம் தரப்பட்ட தாமிரப் பத்திரங்களில் இந்தியில் மட்டுந்தான் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதை அரசு அறியுமா? மேற்கொண்டு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு ஒன்றும் இல்லை. ஆனல், தாமிரப் பத்திரங்கள் இந்தியில் மட்டும் எழுதப்பட்டிருப்பது உள்ளபடியே நம்முடைய அதிருப்திக்குரிய ஒன்றுதான். தாமிரப் பத்திரத்தின் மொத்தத் தொகையே ஆயிரம் என்ற அளவுக்கு இருப்பதால் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் சென்றிருக்கிற தியாகிக்கு அந்தந்த மாநில மொழியிலே அவர்கள் தாமிரப் பத்திரங்களை வழங்கியிருப்பார் களானல் மிகப் பொருத்தமுடையதாக இருந்திருக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : முதலமைச்சர் அவர்கள் அனுப்பிய கடிதத்திற்கு பதில் இதுகாறும் அனுப்பப்படவில்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினர்கள். அதற்கு ரிமைண்டர் ஏதாவது இந்த அரசு எழுதியிருக்கிறதா? அப்படி எத்தனை ரிமைண்டர்கள் எழுதியிருக்கிருர்கள் என்ற விவரத்தை அளிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : அதற்கான ரிமைண்டர் அனுப்பப்படவில்லை. ஆனல், அதற்கிடையில் பாராளுமன்றத்தில் மாத்திரம் கேள்விகள் கேட்கப்பட்டன. இந்தி எழுத்துக்களைப் போடாமல், இந்திச் சொற்களுக்கு ரோமன் லெட்டரைப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்று போடப்பட்டிருக்கிறது. ஆனல், அரசியல் சட்டத்தின்படி "ப்ரைம் மினிஸ்டர்" என்று குறிப்பிடப் படவேண்டும் என்று கருதுகிறேன். "ப்ரதான் மந்திரி" என்று குறிப்பிடக்கூடாது என்று அரசியல் சட்டம் கூறுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த அரசின் கொள்கை இருமொழிக் கொள்கை என்பது இந்தச் சட்டப் பேரவையில் தீர்மானம் மூலமாக மத்திய அரசுக்கு அறிவிக்கப்பட்டபோதிலும், அதனை மத்திய அரசு இதுவரையில் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே, மத்திய அரசு இந்த அரசின் இருமொழிக் கொள்கையினை ஏற்றுக் கொள்வதற்கு இந்த அரசு மேற்கொண்டு என்ன நடவடிக்கையினை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நம்முடைய மாநிலத்தில் அனைவரும் அதை ஏற்றுக்கொண்டாலே போதும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நம்முடைய அரசியல் சட்டத்தின் படியும், நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதியின்படியும் ஆங்கிலத்திலும் எழுதலாம் இந்தியிலும் எழுதலாம் என்று இருக்கிறது. இந்தச் சுற்றறிக்கையின் மூலமாக ஆங்கிலத்தில் எழுதுவது தடுக்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முதலில் அது தடுக்கப் படக்கூடிய சூழ்நிலை இருந்த காரணத்தால் கடிதம் எழுதியனுப்பப் பட்டது. பிறகு அங்கே பாராளுமன்றத்தில் மாத்திரம் ஏதோ உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருப்பதாக நமக்குத் தெரிய வருகிறது. ஆனால், நேரடியான பதில் எதுவும் வரவில்லை.

அரசு கல்லூரி பேராசிரியர்கள்

* 120 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கார் கல்லூரிகளில் பணிபுரியும் பிஎச்.டி. பட்டம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு தரும்போது முன்னுரிமை வழங்கப் படுகிறதா?

(இ) ஆம் எனில், தற்போது எத்தனை பிஎச்.டி. பட்டதாரிகள் அரசு கல்லூரிகளில் பணியாற்றுகிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை. தமிழ்நாடு கல்விப்பணி தனி விதிகளில் பிஎச்.டி. பட்டம் பெற்றவர் களுக்கு முன் உரிமை வழங்குவதற்கு தனிச் சலுகை ஒன்றும் நிர்ணயிக்கப்படவில்லை.